476

உ
சிவமயம்
திருச்சிற்றம்பல

OFFICE OF THE REGISTRAR
30 OCT 1925
MADRAS



தென் திருப்பதியாகிய சீர்காழிவேர்தாம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலேழுந்த
கண்ணுடைய வள்ளலார் சுவாமிகளின் அருட்பெற்றவரும்,
"பூரணானந்தோதய" மென்னும் அரியஞான கிரந்தகர்த்தாவுமாகிய
மஹான் — சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

# தேசிகானந்தமணி.

இஃது
ஸ்ரீமத் — சிவப்பிரகாச தேசிக சுவாமிகளால்
தீக்ஷாநாமம் பெற்றவரும்,
சென்னை அமீர்நகர்
ம-ா-ா-ஸ்ரீ ச. பெருமாள்பிள்ளை யவர்கள் பிரதமப் புத்திரருமாகிய
ச. பெ திருக்காமணிப் பிள்ளையென்று வழங்கும்
ஸ்ரீ சிவயோகானந்த தேசிகரா லியற்றி

—)(—

சென்னை வேளாளத்தேவனாம்பேட்டை பிரகாரர்பதி
ம-ா-ா-ஸ்ரீ M. இராது உபாத்தியாயர் நன்முயற்சியினாலும்,
கையோப்பக்காரர்களி னுதவியாலும்,
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு

—)✻(—

உசு — வது வருடத்தின் குருபூஜாதினமாகிய
...ப்தம் 5027 கலிச் சரியான தமிழ் குரோதன ஸ்ரீ
...னி மீ 22 உ மூலநட்சத்திரங்கூடிய
...ன்று ஷை நாயனாரின் சன்னிதானத்தில்
...ந்த தேசிகரா லரங்கேற்றஞ்செய்யப்பட்டது
1925 ஸ்ரீ ஜூலை மீ 5 உ

—(§)—


O23:417
N25
172455

29650 (?)
579

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
30 OCT 1929



... 600 008

ஸ்ரீமத் சிவப்ரகாச தேசிக சுவாமிகளால் தீக்ஷாநாமம் பெற்ற,

சென்னை, அமீர்நகர் கனம் ச. பெ. திருக்கமணி பிள்ளை என்று வழங்கும்,

ஸ்ரீ சிவயோகானந்த தேசிகர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

—(‡)—

தென்திருப்பதியாகிய சீர்காழிவேத்தாம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடைய வள்ளலார் சுவாமிகளின் அருட்பெற்றவரும்,
"பூரணனந்தோதய" மென்னும் அரியஞான கிரந்தகர்த்தாவுமாகிய
மஹான் – சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்

# தேசிகானந்தமணி.

## கணபதித்துதி – காப்பு.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—][—

உகாரகா மகாரமதா மோங்காரப் பிரணவமா
யுலகுயிரு ஞதனுகி
ஓங்குமறை முதற்பொருளே வோதரியப் பழம்பொருளே
யும்பரிம்பர் பணியுங்கோனே
செகநடுங்க தன்னிகரொ ருவரில்லா தாசதையே
செய்யசூான் கயமுகவனுங்
தேவாதி தேவரெலாஞ் சிந்தைநொந்து சேவைசெய்து
திகைத்தலைந்தா ரிடுக்கணாலே
திகழ்நைமி சாரண்ய மடமதனிற் செழித்தங்கே
சிவனுவமையுங் கலித்தெடுக்கச்
சித்திரத்தி லுருகொண்டு தேவரிடர் தீர்க்கவந்த
சின்மயத் தந்தாவளனே!
[illegible] வகான்றகி யிவண்சொலவே
அறிவிலறிவா யெழுந்து
ஆனந்த வருட்பொழிந்தா ளாதிகுரு பரமதேவ
ஐங்கரனே நமநமஸ்தே. (க)

தேவநகர்ச் செங்கோலைச் செலுத்திவருஞ் சோமகாந்தன்
றேகநலி கொண்டவதனுற்

சிந்தைமிக நொந்துவாடித் தீராத வினையிதென்று
திரிந்துகாடு வனமடைந்தோன்
பாவபுண்ய மிருவினையும் பற்றித்தொடர்ந் தோட்டியதைப்
பறந்திடவே பகர்ந்துகாட்டும்
பாசமற்று பக்திவழி பண்புயர்ந்த பிருகுமுனி
பணிந்திடவே வருடந்தாண்ட
காவலனே கருணீகனே கருதிமன நினைந்துசதா
கலங்கிதொழு மேமகண்டன்
கவலையற்று களித்திடவே கருணைதந் தாதரித்தக்
காரணனே கயமுகனே
ஆவலுடன் சிவலிங்க வாசான்றுதி யிவண்சொலவே
அறிவிலறிவா யெழுந்து
ஆனந்த வருட்பொழிந்தா ளாதிகுரு பரமதேவ
ஐங்கரனே நமநமஸ்தே. (௨)

அன்றுட மகஞ்சலித்தே யகிலம்வாழ் வல்லவனு
மன்னநடைக் கமலையேனு
மன்னைதந்தை யருந்தவத்தி லந்தமிலா துருவாகி
யந்தகனுயப் பிறந்தகக்கன்
முன்வினையாற் செவிடுமைநோய் துயரதை துடைத்தஞான
முற்கல முனிரூபமதாய்
முன்னெழுந்து காத்தவனே மும்மலத்தை நீக்கவல்ல
மூஷிகவா ஹனதேசிகனே!
இன்புயரு நன்பருட னிரவுபக லிணங்கிசதா
இளைத்தவனும் வல்லாளனை
யிழுத்துமர மொடுபுணைந்த விடுக்கணதை யறுத்தாண்ட
யேகசரா சரநிலைறந்தோய்
அன்புயருஞ் சிவலிங்க வாசான்றுதி யிவண்சொலவே
அறிவிலறிவா யெழுந்து
ஆனந்த வருட்பொழிந்தா ளாதிகுரு பரமதேவ
ஐங்கரனே நமநமஸ்தே. (௩)

—:—

## வேறு துதி.

கண்ணிகள்.

(௧) சித்திரத்தி லுதித்தவனே சின்மயானந்ததேவே
அத்திமுகப் பிரணவனே யடிவணங்கி தெண்டனிட்டேன்

Q23:417 N25
172485

(உ) பத்தர்முத்தர் சித்தர்போற்றும் பக்தியுரு வானவனே
முத்திமுத லானவனே மூவர்தேவர் பணிந்திடவே (சித்)

(௩) அண்டரண்ட பகிரண்ட மகிலாண்ட கோடியெலாந்
தெண்டனிட்டுத் தொழுதிடவே தீவினைக டீர்த்திடவே (சித்)

(௪) புத்திமுத்தி யருளவந்த புராதன புதைப்பொருளே
நித்தமுனை நினைந்தவர்க ணீடுவினைக ணீக்கியாள (சித்)

(௫) எத்திசையும் புகழ்ந்துபோற்ற யேகாந்த மானவனே
சித்தலித்த நினைந்தவர்கட் சிறுமைதனை யகற்றிடவே (சித்)

(௬) மூலாதார நிலையே மூஷிக வாஹனனே
காலாக் காலனை யுதைத்த கங்காதரன் களித்தெடுக்க (சித்)

(௭) அத்துவ தத்துவத்து ஸ்ரூபியா யமர்ந்தவனே
சத்திய வேதாந்த சற்குருமாலை சாற்றவருள் (சித்)

—(§)—

## வள்ளல் சற்குரு வணக்கமாலை.

—§—

### சந்த கலிவிருத்தம்.

—(§)—

அருளே பொருளே யறிவி லன்பாய்
உருவா யெழுந்து வுயிராய் நிறைந்து
கருவை யடையாக் கடைக்கண் பார்த்து
மருளே நீக்கும் வள்ளல் குருவே. (க)

பெருத்த துயராற் பேயாய்த் திரிந்தேன்
கருத்த விருளிற் கலங்கி தவித்தேன்
அருத்த மறியே ஞசான் றெரியேன்
வருத்தந் தனிப்பாய் வள்ளல் குருவே. (உ)

அழுதேன் றொழுதே னப்பா வரசே
கழும லகற்றுங் கருணைக் கடலே
வழுவா திருக்க வரமே யருள்வாய்
மழுமா னேந்தும் வள்ளல் குருவே. (௩)

ஏனோ பிறந்தே னேக்க மடைந்தேன்
கானோர் பொல்லா கடின கடித்தேன்
தானோர் நெறியே தந்தா ணமவே
வானோர்ப் புகழும் வள்ளல் குருவே. (௪)

அழியு மூடலு ளறிவா யமர்ந்து
ஒழியாச் சிந்தை யொடுங்கத் தெரியா
முழிக்கு மூடனேற்கு மோன நிலையின்
வழியே யருள்வாய் வள்ளல் குருவே. (௫)

பதைக்கு மனதாற் பாவமே புரிந்து
சிதைந்தேன் கலைந்தேன் சிறுமை யடைந்து
யெதையு னினைந்தே னிரவும் பகலாய்
வதையே நீக்கும் வள்ளல் குருவே. (௬)

ஆடியே யலைந்தே னனைவரு நகைக்கப்
பாடியே குலைத்தேன் பலருங் காண
கூடியே யிருந்தோர் குறைக ளுரைத்தார்
வாடியே மெலிந்தேன் வள்ளல் குருவே. (௭)

நஞ்சுண் டவனே நான்மறைத் துதியே
அஞ்சா நெஞ்ச னல்லலில் மூழ்கி
கெஞ்சி தொழுதேன் கிருபைக் கண்பார்
வஞ்சம் விளக்கு வள்ளல் குருவே. (௮)

இன்னும் வஞ்ச மெளியன்மீ தேனோ
கன்ம மென்னோ கருத்தி லறியேன்
என்ன செய்வே னேது செய்வேன்
மன்னு புகழே வள்ளல் குருவே. (௯)

பூசித் தறியேன் புண்ணியந் தெரியேன்
மாசிலா மணியே மாமகத் துவனே
தேசிகா வடியேன் றேடினன் றினமே
வாசித் தரியேன் வள்ளல் குருவே. (௰)

கண்ணாய்க் கருத்தாய்க் கலையுட் கலியாய்
பண்ணார்த் துதியே பரனே யரனே !
விண்ணாய் நின்ற வெளியே யொளியே
மண்ணோர்ப் புகழே வள்ளல் குருவே. (௰௧)

குறையால் பிறந்தேன் குலைந்தேன் நலிந்தேன்
முறையி னுறையுண் மூழ்கித் தவித்தேன்
துறையே யருள்வாய்த் துணையா யிருந்து
மறையின் முடிவே வள்ளல் குருவே. (௰௨)

கவுரவம் வேண்டி கலித்தேன் கதைத்தேன்
பவமே புரிந்து பாரினில் வாழ்ந்தேன்

தவமே யிருந்து தன்னையே புணர
மவுன மருள்வாய் வள்ளல் குருவே. (௰௩)
மஞ்சை கிறத்தை மனதிற் காணேன்
கஞ்சா வெறியன் கனத்தக் குடியன்
தஞ்ச மென்றுன் றாளினை யடைந்தேன்
வஞ்சந் துறத்தும் வள்ளல் குருவே. (௰௪)
வேத முடிவே விமலேச் சுரனே
மாதவம் புரிந்தோர் மகத்வ மடைந்தார்
காதமே தெரிந்தா னலமே யடைவேன்
வாதனைத் தீர்த்தாள் வள்ளல் குருவே. (௰௫)
நம்பினோர் நம்பன் நாடினோர்த் துணையே
அம்புவியிலே வல்லவில் வாழ்ந்தேன்
சம்புவி னிறையாய்ச் சனனமொழித்தழல்
வம்பன் றனையான் வள்ளல் குருவே. (௰௬)
குரங்கா யலைந்தேன் குதித்தேன் றிரிந்தேன்
அரஹரா வெனவே யடியார்ப் பணிய
சிரமா யமர்ந்த சிவலிங்கேச் சுரனே!
வரமே யருள்வாய் வள்ளல் குருவே. (௰௭)
கனமாய் தனமாய்க் கன்ம வினையா
யினமா யிருந்தே னெங்கும் புகழச்
சினமே யடைந்தேன் திருவடி மறந்தேன்
மனமே யலைந்தேன் வள்ளல் குருவே. (௰௮)
பழித்தேன் பலரைப் பவமே சுமந்தேன்
முழித்தே னெளித்தேன் முன்வினை யறியேன்
செழித்த நிலையே சிவலிங்க தேவே
வழி தனை யருள்வாய் வள்ளல் குருவே. (௰௯)
நீதியே நினைவே நேசரி னுறவே
சோதியே சுடரே சுழுமுனை விளக்கே
மேதினிற் போற்ற மின்னுஞ் சிவலிங்கா
வாதியா தெனையாள் வள்ளல் குருவே. (௨௰)

—(‡)—

## பஞ்சரத்நம்.

[வேறு சந்தம்]

(௧) வாதிக்க வேண்டாமெனை வள்ளல் குருவே ஐயா
சோதிக்க வேண்டாமெனைச் சுத்தசைதந்ய ரூபனே
ஓம் குருநாதா ஓம் சிவலிங்கா நின்னடியனுக் கருட்செய்வாயே.

172455
Q23:4917

(௨) அத்தனே சித்தனே யப்பனே ஐயனே
முத்தி முதல்வனே மூலாதாரப் பொருளே
ஓம் குருநாதா ஓம் சிவலிங்கா நின்னடியனுக் கருட்செய்வாயே.

(௩) சுத்தனே நித்தனே சோதிச் சொரூபனே
வித்தக விமலனே வேண்டி தொழுதனனே
ஓம் குருநாதா ஓம் சிவலிங்கா நின்னடியனுக் கருட்செய்வாயே.

(௪) எந்த நிலைகூறவே நினைமழை மனந்தேருவேன்
அந்தரங்க சொரூபந்தனை யறிந்திலேனே
ஓம் குருநாதா ஓம் சிவலிங்கா நின்னடியனுக் கருட்செய்வாயே.

(௫) பாவியென் போலொருவர்ப் பாரினி லெங்குங் காணேன்
ஆவி யகலாமுன்னு னருடந்து விரட்சிப்பாயே
ஓம் குருநாதா ஓம் சிவலிங்கா நின்னடியனுக் கருட் செய்வாயே.

———:———

இராகம் - பைரவி ரூபகதாளம்.

பல்லவி.

தயைப் புரிந்தாள தாமதமேனையா
சருவ கிருபாகரனே சாந்தசித்த சிவலிங்கனே

அநுபல்லவி.

வையமகிழ்ந்திட வந்தருடந்தோனே
ஐயாவென் றுந்தனடிமலர்த் தொழுதேனே (தயை)

சரணங்கள்.

(௧) கல்விப் பொருளைக் கருத்தி லுரைத்திட்ட
அல்லலை நீக்கி யணைத்தா தரித்திட்ட
எல்லையிலா ஞான மெய்குந் துலங்கிட்ட
வல்லவா நின்னடி வந்து வணங்கினேன் (தயை)

(௨) மன்னுநி மன்னர்கள் மகிழ்ந்து வாழ்ந்திட
அன்பு மனத்தோரை யாதரித் தாண்டிட
நன்னெறி நிலையே நாட்டியே வைத்திட்ட
அன்னை தந்தைகுரு தெய்வமென் றண்டினேன் (த)

(௩) எங்கும் புகழாக வெண்டிசையும் போற்ற
மங்கா வுருகொண்டு மாலிங்கமாய் நின்ற
எங்குரு நாதனே யெல்லா மறிகின்ற
திங்களொளியே திருக்க மணி சேவித்தும் (தயை)

## வரம்வேண்டன்மாலை.

பண் - பழம்பஞ்சுரம்

வேத மறிந்திலேன் வினையைப் போக்கிலேன் விண்ணவர்த்தொழுமீசனே
மாதவத்தினர் மகிழ்ந்து போற்றிடும் மாண்பு நிறைமலர்ப் பாதனே
சாதனமருள வந்த சாந்து சித்த சிவலிங்க சதா ஜோதியே
நாதனே நின் பாதமே கதி நம்பினேன் குரு தேசிகா (௧)

ஆடிமென மறிந்திலே னுரைத் தெரிந்திலே னகங்காரத்தால்
தேடிடும்வகைத் தெரிந்திலேன் தேஜோன் மயானந்த பாதனே
கூடிநின்குணச் சாந்து சித்த சிவலிங்க குண ஜோதியே
நாடியேநின் பாதமேகதி நம்பினேன் குரு தேசிகா. (௨)

அல்லும் பகலு மலைந்திடுமன மடக்கிடுமுள மறிந்திலேன்
எல்லாம் புகழ்ந்திட வெங்கு நிறைந்தவா வெழினிறை மலர்ப்பாதனே
நல்லவர் தொழுஞ் சாந்துசித்த சிவலிங்க நாதஜோதியே
வல்லவாநின் பாதமேகதி நம்பினேன குரு தேசிகா. (௩)

நடினங் கண்டிலேன் நாதங் சேட்டிலேன் நான்மறைத்தொழு நாதனே
படியவர் நிதம் பணிந்து போற்றிடும் பங்கயமலர்ப் பாதனே
வடிவ மோநகிஞ் சாந்துசித்த சிவலிங்க வள்ளற் ஜோதியே
அடியவனின் பாதமே கதி யண்டினேன் குரு தேசிகா. (௪)

எங்குமோடி யலைகின்றேன் கழலிருக்குமிடமதை யறிந்திலேன்
பொங்கிடு மனந் தங்குநிலையதைப் போற்றிலே னன்பு பொருந்திலேன்
தங்க மயகுணச் சாந்து சித்த சிவலிங்க தனற் ஜோதியே
எங்கெலும் நின் பாதமேகதி வணங்கினேன் குரு தேசிகா. (௫)

சித்தஞ் சிதையாமற் சிவய நமவெனத் தேடியே சிந்தைசெய்திடும்
பத்தர்கணிதம் பணிந்து போற்றிடும் பண்பு நிறைமலர்ப் பாதனே
அத்தனே மனச் சாந்துசித்த சிவலிங்க வருள் ஜோதியே
நத்தி வந்துநின் பாதமே கதி நம்பினேன் குரு தேசிகா. (௬)

பூதி யணிந்தவர்ப் புகழ்ந்திடப் பூரணனந்தோ தயாநூற் புகன்றவா
பாதி மதியணிச் சடையனே பசுமைநிறை மலர்ப் பாதனே
சாதி குலமிலாச் சாந்துசித்த சிவலிங்க சகத் ஜோதியே
வாதியாதருட் பாதமே கதி வணங்கினேன் குரு தேசிகா. (௭)

ஆசித்தேன் றின நேசித்தேன்மன மங்கலிங்கமா யமர்ந்தவா
பூசித் தறிந்திலேன் போதனே குருநாதனே நின்பொற் பாதமே
மாசிலா மணியே சாந்துசித்த சிவலிங்க மஹா ஜோதியே
வாசியே நின் பாதம் நம்பினேன் வாழ்வருள் குரு தேசிகா. (௮)

## போற்றி விருத்தம்.

உலகெலாம் பணிந்து போற்ற வுருவங்கொண் டவனி வந்தே
நலம்பொல நவின்றே தந்த நாதனே பரம தேவே
குலமலத் தழுந்தி லார்கள் கும்பிடு மாமஹேசா!
திலகம்போ லிலகுஞ் சித்த சிவலிங்க குருவே போற்றி. (௧)
பலபல வுருவே கொண்டு பாரினிற் பக்தர் முன்னே
அலகினிற் சோதி யாகி யம்பலத் தாடல் சோனே
மலமெனும் வினையை நீக்கி மண்டல மூன்றி னுள்ளே
சிலம்பொலி தனையே காட்டுஞ் சிவலிங்க குருவே போற்றி. (௨)
சாம்பவி சிவனு மாகிச் சராசர வுயிரு ளெங்கும்
ஓம்பிர ணவமாய் நின்று வொலித்திடு மொலியே வோர்ந்து
தூம்பதை யறிந்தெஞ் ஞான்றுஞ் சுத்தசை தன்ய ரானந்
தீம்பர்க ளுறவே ஐயா! சிவலிங்க குருவே போற்றி. (௩)
அற்புதா னந்த ஞான வாசானு யடியார் கட்கு
கற்பய னருள வந்த நான்மறைப் பொருளே தேசி
பொற்புயர் புலித நாதா போதனைத் தந்தாள் வல்ல
சிற்பர சின்மய சொருபச் சிவலிங்க குருவே போற்றி. (௪)
அவமதை யகற்றி யாளு மண்ணலே வரனே சம்போ!
புவன போகங்க ளற்றுப் பொறியுடன் புல னொடுங்கி
தவமதைப் புரிந்த நல்லோர் தன்மையி றன்மை யானேய்
சிவயோகா னந்த னேத்துஞ் சிவலிங்க குருவே போற்றி. (௫)

—§—

## வாழி விருத்தம்.

ஆதிமறை சோதியாகி யருண்மலி யயர்ந்துகா
னடியவர்க டினம்பணியு மரனுமுமா தேவி
கோதில்லா தாறுமுகன் றெய்வயானை வள்ளி
கூறுமயில் வேலுடனே வெண்ணீ றக்கும்
நீதிநெறி பேசிவைத்த சமயகுரு நால்வர்களும்
நித்தியா னந்தசாந்த சித்த சிவலிங்கனுமே
ஓதிமொ சாரியனுர்த் குதவினருஞ் சமாதி
யுருக்கமுடன் பூசித்தோரும் வாழி சதாமன்னே.

—(S)—

மஹான் - சாங்குசித்த சிவலிங்க நாயனாரவர்களின்
தேசிகானந்தமணி ஸமாப்தம்.
திருச்சிற்றம்பலம்.

3:4
N45
172455